# முயற்சியாண்மைக்கல்வி

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## முயற்சியாண்மையின் நன்மைகள்

## தரம் 10

**03**

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

**01) மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கேடிடுக.**

1. முயற்சியாண்மை என்பது.
   - I. முயற்சியாளர்களுக்கு நன்மைகளை வழங்குகின்றது.
   - II. முயற்சியாளர்களுக்கும், கிராமத்துக்கும் நன்மைகளை வழங்குகிறது.
   - III. உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் முயற்சியாளர்களுக்கு நன்மைகளை வழங்குகிறது.
   - IV. முயற்சியாளர்களுக்கும் நன்மைகளை வழங்குவதுடன் நாட்டுக்கு நன்மை அழிக்காது.

2. பல்வேறு நாடுகள் அபிவிருத்தி அடைந்த நிலையில் காணப்படுகின்றன. அதற்கான காரணம் அந்நாட்டில்,
   - I. அதிக எண்ணிக்கையான குடித்தொகை காணப்படல்.
   - II. பெரியளவிலான நிலப்பரப்பைக் கொண்டிருத்தல்.
   - III. பல்வேறு கைத் தொழில்கள் காணப்படுதல்.
   - IV. பல்வேறு முயற்சியாளர்களின் பங்களிப்பு காணப்படுதல்.

3. ஒரு முயற்சியாளராக இருப்பதனால் தனிநபருக்கு கிடைக்கும் பயன்கள்,
   - I. ஆபத்துக்கு முகம் கொடுத்தல்.
   - II. தவறுகள் மற்றும் விமர்சனங்களுக்கு முகம் கொடுத்தல்.
   - III. பயன்படுத்தப்படாத திறன்களை பயன்படுத்த முடிதல்.
   - IV. கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ச்சியாக நடைபெறல்.

4. முயற்சியாளர் மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தாலும் தனது சொந்த விவகாரங்களில் சுயமாக முடிவுகளை எடுக்க வேண்டும் என நம்புகின்றார். அவர் மீதான இந்த நம்பிக்கை,
   - I. அது தன்னிறைவு எனப்படும்.
   - II. சுதந்திரத்தின் மூலமாக அதிக திருப்தியை அடைதல்.

III. ஒருவரின் சொந்த விதி அவரை சார்ந்ததாகும்.
IV. செயற்பாடுகளின் பன்முகத் தன்மை.

5. வெற்றிகரமானதொரு முயற்சியாளருக்கு சமூகத்திலிருந்து கிடைக்கும் நன்மை,
   I. சமூக நலனில் பங்கேற்க முடிதல்.
   II. புகழ் மற்றும் பாராட்டுக்களைப் பெறுதல்
   III. கவர்ச்சிகரமான இலாபம் பெறுதல்
   IV. தனிநபரின் தலைவிதி அவரிடத்திலே காணப்படல்
6. முயற்சியாளர் ஒருவர் நிறுவனத்தில் பல்வேறு பாத்திரங்களைக் கொண்டிருக்கலாம். அத்தகைய பாத்திரங்களுள் **உள்ளடங்கப்படாதது,**
   I. பிரச்சினை செய்பவராக இருத்தல்
   II. தலைவராக இருத்தல்
   III. முகாமையாளராக இருத்தல்
   IV. உரிமையாளராக இருத்தல்

### 02) சுருக்கமான விடை தருக.

1. "முயற்சியாளர் என்பவர் ஒரு நாட்டிலுள்ள தனித்துவமான நபராவார்." அவர் அவ்வாறு அழைக்கப்பட காரணம் என்ன?
2. முயற்சியான்மை மூலம் இரண்டு வகையான நன்மைகள் கிடைக்கின்றன. அவை எவை?
3. முயற்சியான்மையில் ஈடுபடுவதன் மூலம் முயற்சியாளருக்கு கிடைக்கும் நன்மைகள் 4 தருக.
4. வெற்றிகரமான முயற்சியாளர் ஒருவருக்கு சமூகத்தில் கிடைக்கின்ற நன்மைகள் எவை?
5. முயற்சியாளர் ஒருவர் சமூக நலனில் பங்களிப்புச் செய்யக்கூடிய 3 வழிமுறைகளைக் குறிப்பிடுக.
6. முயற்சியாளர் ஒருவரின் பாத்திரங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
7. எந்த பாத்திரத்தின் கீழ் வணிகத்திற்குத் தேவையான வளங்கள் வழங்கப்படுகின்றன.
8. "முயற்சியாளரின் நுகர்வு மட்டம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்படலாம்."
   I. நுகர்வு அளவை நிர்ணயிக்கும் காரணி யாது?
   II. வெற்றிகரமான முயற்சியாளரின் நுகர்வு அதிகளவில் இருப்பதற்கான காரணங்கள் யாவை?
9. முயற்சியான்மைக் கல்வியைக் கற்கும் நீங்கள் எதிர்காலத்தில் முயற்சியாளராகவா அல்லது ஊழியராகவா மாற விரும்புகின்றீர்கள்? காரணம் தருக.
10. ஓர் முயற்சியாளராக இருப்பது எப்படி ஒரு நபரை சலிப்பான செயற்பாடுகளிலிருந்து விடுவித்து அவருடைய பயன்படுத்தப்படாத திறனைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.
11. உள்நாட்டு பொருளாதாரத்திற்கு முயற்சியான்மையினால் கிடைக்கும் 4 நன்மைகளைக் குறிப்பிடுக.
12. வருமான பங்கீட்டின் சமமின்மையை குறைக்க முயற்சியாளர் பங்களிக்கின்றார்.
   I. வருமான பங்கீட்டின் சமமின்மை என்பதால் கருதப்படுவது யாது?



COMMERCE & BUSINESS STUDIES BRANCH

II. வருமான பங்கீட்டின் சமமின்மையை குறைப்பதில் முயற்சியாளரின் பங்களிப்பு யாது?

13. ‘‘முயற்சியாளர் உள்நாட்டு வளங்களை பயன்படுத்துகின்றார்’’

I. இவர் இந்த வளங்களை பயன்படுத்துவதிலிருந்து எதை எதிர்பார்க்கிறார்?

II. இங்கு வளப்பயன்பாடு என்பதால் கருதப்படுவது யாது?

14. ‘‘முயற்சியாளரினால் புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன’’ உங்களுக்குத் தெரிந்த 3 பொருட்கள் சேவைகளைக் குறிப்பிடுக.

15. முயற்சியாளர்களின் அதிகரிப்பு நாட்டின் மொத்த உற்பத்தியை எவ்வாறு அதிகரிக்கச் செய்கின்றது என்பதை விளக்குக.

16. முயற்சியாளர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதாக அறிந்திருப்பீர்கள்.

I. பொருளாதார வளர்ச்சி என்பதால் கருதப்படுவது யாது?

II. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முயற்சியாளர் எவ்வாறு பங்களிக்கின்றார்?

17. தன்னாதிக்கமுள்ள சுதந்திரமான பொருளாதாரச் சமூகம் என்றால் என்ன?

18. வேலையின்மை என்றால் என்ன?

COMMERCE & BUSINESS STUDIES BRANCH